2020 மார்ச் 24]

(எ) தொன்மைவாய்ந்த திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளுதல், திருக்கோயில் குளங்கள் தூர் வாருதல், இலவச திருமணங்கள் நடத்தி வைத்தல், 'திருக்கோயில்' தொலைக்காட்சி தொடங்குதல், திருத்தணி, சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு புதிய மலைப்பாதை அமைத்தல், மருதமலை சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு மின்தூக்கி அமைத்தல், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்கள் எளிதாக தரிசனம் செய்ய வசதிகள் உள்ளிட்ட இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. தொன்மை வாய்ந்த 55 திருக்கோயில்களில் அதன் தொன்மை மாறாமல் பாதுகாத்திட, 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு மற்றும் திருக்கோயில் நிதியிலிருந்து திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. திருக்கோயில்களுக்குச் சொந்தமான 100 திருக்குளங்கள் 26.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு மற்றும் திருக்கோயில் நிதியிலிருந்து தூர்வாரி, படித்துறை மற்றும் தடுப்புச் சுவர் கட்டப்பட்டு, திருப்பணி மேற்கொள்ளப்படும்.

3. நிதி வசதி மிக்க 50 திருக்கோயில்களில் 4 கோடி ரூபாய் செலவில் ஏழை, எளிய மற்றும் நலிவடைந்த 10,000 இணைகளுக்கு இலவச திருமணங்கள் நடத்தி வைக்கப்படும்.

4. 8.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'திருக்கோயில்' என்ற பெயரில் தொலைக்காட்சி தொடங்கப்படும்.

5. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள 1,000 திருக்கோயில்களில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

6. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள 1,000 கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணிக்காக 10 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

7. திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 8.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மலைப்பாதை அமைக்கப்படும்.

8. மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின் தூக்கி அமைக்கப்படும்.

9. திருவிடந்தை அருள்மிகு நித்திய கல்யாணப் பெருமாள் திருக்கோயிலில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் கட்டப்படும்.

10. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த மண்டல அலுவலகங்கள், 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்படும்.

11. ஒரு கால பூஜை, 214 திருக்கோயில்களுக்கு 2.14 கோடி ரூபாய் மதிப்பீடில் விரிவுபடுத்தப்படும்.

12. 31–7–2019 வரை 5 ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிந்து பணி நிறைவு செய்த சுமார் 2,000 தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய பணியாளர்களின் பணியினை தகுதியின் அடிப்படையிலும் காலிப் பணியிடங்களை கணக்கில் கொண்டும் காலமுறை ஊதியம் வழங்கி பணி நிரந்தரம் செய்யப்படும்.

13. திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற நிரந்தரப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் துறை நிலையிலான ஓய்வூதியம் 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

14. 9 முதுநிலை திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு 16.43 கோடி ரூபாய் செலவில் நாள் முழுவதும் பிரசாதம் வழங்கப்படும்.

15. அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி மற்றும் இராமேஸ்வரம் இராமநாதசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பக்தர்களின் வசதிக்காக 176.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளுடன்கூடிய பெருந்திட்டம் தயாரிக்கப்படும். முதற்கட்டமாக 80.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

16. புதியதாக 9.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9 இணை ஆணையர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு, 19 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

2020 மார்ச் 24] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

17. புதியதாக 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8 உதவி ஆணையர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு, 17 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

18. திருக்கோயில்களில் 3.64 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நகை சரிபார்ப்புப் பிரிவில் 50 கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். மேலும், 4 பணியிடங்கள் நிலை உயர்த்தப்படும்.

19. திருக்கோயில்களில் புதியதாக 117 ஆய்வர் பணியிடங்கள் மற்றும் 117 அலுவலக உதவியாளர் பணியிடங்கள் 12.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தோற்றுவிக்கப்படும்.

20. திருக்கோயில்களின் ஆண்டு வருவாயின் அடிப்படையில் 14.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் ஆணையர் முதல் செயல் அலுவலர் நிலை–4 வரை 205 பணியிடங்கள் ஏற்படுத்தப்படும்.

21. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து, 60 வயதை கடந்து ஓய்வு பெற்ற கிராம கோயில் பூசாரிகள் ஓய்வூதியம் 1,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், ஓய்வூதியம் பெறுவதற்கான உச்ச வரம்பு 24,000 ரூபாயிலிருந்து 72,000 ரூபாயாக உயர்த்தப்படும். இதற்கான கூடுதல் செலவினம் 4.64 கோடி ரூபாய் அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

22. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் ஆண்டு வருமானம் 10 இலட்சம் ரூபாய்க்கும் மேல் உள்ள 331 திருக்கோயில்களில் தூய்மை மேம்படுத்தப்படும். முதற்கட்டமாக நடப்பு ஆண்டில் 100 திருக்கோயில்களில் தூய்மை குறித்தான நிலையான இயக்க நடைமுறையைப் (Standard Operating Procedure) பின்பற்றி திட்டம் தயாரித்து நடைமுறைப்படுத்தப்படும்.

23. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் ஆண்டு வருமானம் ரூ.10 இலட்சத்திற்கும் மேல் உள்ள 331 திருக்கோயில்களில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்கள் எளிதாக தரிசனம் செய்வதற்கு வசதிகள் செய்து தரப்படும். முதற்கட்டமாக 100 திருக்கோயில்களில் நிலையான இயக்க நடைமுறையைப் பின்பற்றி திட்டம் தயாரித்து செயல்படுத்தப்படும்.